Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

MONDAY, JUNE 28,2021 2021

திங்கட்கிழமை ஜூன் 28, 2021 | ஒளி: 07 கதிர்: 33 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# சிலுவையில் அறைந்த பூசாரி குழுவுக்கு வலை



இருவரைக் கடத்திச்சென்று, அவ்விருவரின் உள்ளங்கைகளில் ஆணிகளை அறைந்தாகக் கூறப்படும் பூசாரி உள்ளிட்ட குழுவினரைத் தேடி, வலை விரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, பாதிக்கப்பட்ட இருவரும் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றார்.

கண்டி, பலகொல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பலகொல்ல பிரதேசத்திலுள்ள தேவாலயமொன்றில் பூசாரிக்கு (கப்புவா) பேஸ்புக்கின் ஊடாக சேறுபூசப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே அவ்விளைஞர்கள் இருவரும் கடத்தப்பட்டு, இவ்வாறு துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விருவரையும் கடத்திச் சென்ற குழுவொன்று, பலகையொன்றின் மீது கைகளை வைத்து, ஆணிகளை அறைந்துள்ளனர். கடந்த 25ஆம் திகதியன்று இவ்வாறு துன்புறுத்திய குழுவைத் தேடியே, பலகொல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ‘டெல்டா பிறழ்வு வேகம் கூடும்’

நாட்டில் புதிதாகப் பரவிவரும் டெல்டா கொரோனா வைரஸ் பிறழ்வு, மிக வேகமாகப் பரவும் அபாயமுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


“இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியம்” எனப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மேலும் பல பிறழ்வுகள் உருவாகக்கூடும் எனத் தெரிவித்த அவர், இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்காவிடின் பாரதூரமான நிலைமையை சந்திக்க நேரிடும் எனக் கூறியுள்ளார்.

புதிய பிறழ்வுகள் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதென்பதால், அதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது ஏனைய பிறழ்வுகளைக் காட்டிலும் துரிதமாகப் பரவக்கூடும். தடுப்பூசி செலுத்தப்பட்டாலும் இல்லாவிடினும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவதன் மூலம், அபாயகரமான சூழல் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ள முடியும் எனப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டில் டெல்டா கொரானா வைரஸ் பிறழ்வுடன் ஐவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதனிடையே, கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை விரிவுபடுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, எதிர்காலத்தில் நாட்டின் பிரதான அரச வைத்தியசாலைகளில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்படுமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



# ‘எமது தந்தையை விடுதலை செய்யுங்கள்’

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரின் பிள்ளைகள் இருவரும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை, நேற்று (27) சந்தித்தனர்.

வடமராட்சியின் முள்ளி பகுதியில் இடம்பெற்ற சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை திறப்பு



விழாவிற்கு வந்தபோதே நாமல் ராஜபக்ஷவை ஆனந்த சுதாகரின் பிள்ளைகள் சந்தித்தனர்.

தொடர்ச்சி P2

# ‘மூவரும் பெயில் சேரும் பெயில்’

“பிரதேச சபைக்குக் கூட செல்லாத ஒருவரை, நாட்டின் அதிகாரத்துக்கு வர இடமளிக்க வேண்டாம். நாட்டின் முதற் பிரஜையாக்க வேண்டாம். அவ்வாறு ஆக்கினால் நாடு அழிவடையும் என, ஜனாதிபதித் தேர்தலின் போது முழு நாடும் கேட்பதற்குக் கூறினேன்” எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, “இராணுவத்தில் பணியாற்றிய ஒருவருக்கு கட்டளையிட முடியுமே தவிர, வேலை செய்ய முடியாது என்பதை நானே முதலில் வலியுறுத்தினேன்” என்றார்.



“நான் அவ்வாறு கூறும் போது அதனை ஏற்றுக்கொள்ளாமல் 69 இலட்சம் பேர் வாக்களித்தனர்.

தொடர்ச்சி P2

# ‘புறப்படுவோருக்கு துரிதமாக தடுப்பூசி செலுத்தப்படும்’

நாட்டில் இருந்து புறப்படும் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு அனுமதிஅளிக்கப்பட்டு உள்ளது.

“கொரோனா ஒழிப்புச் செயலணியின் கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டது” என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப்பேச்சாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.




வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள தொழிலாளர்களுக்கு, குறித்த நாடுகளால் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

தொடர்ச்சி P2



## வயலில் கவனயீர்ப்பு...

2021 சிறுபோக வேளாண்மை செய்கைக்கு உரம் வழங்கப்படாமையைக் கண்டித்து, பொத்துவில், கிரான், கோவை பிரதேச விவசாயிகள், தமது வயல் பிரதேசத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை, நேற்று (27) முன்னெடுத்தனர்.
(படம் – எம்.எஸ்.எம். ஹனீபா)

# மரண தண்டனைக் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டம்

வெலிக்கடை, மஹர ஆகிய சிறைச்சாலைகளின் மரண தண்டனைக் கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

“வெலிக்கடை சிறைச்சாலையின் மரண தண்டனைக் கைதிகள் மீண்டும் கூரை மீதேறி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்” என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைக்கைதிகள் தமது எதிர்ப்பு நடவடிக்கையை நேற்று முன்தினம் (26) சிறிது நேரம் கைவிட்டிருந்த போதிலும், அன்றிரவு முதல் மீண்டும் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



# ‘திறமை இன்மையையும் விரக்தியையுமே ஜனாதிபதியின் உரை எடுத்தியம்புகிறது’

நாட்டு மக்களுக்கான ஜனாதிபதியின் உரை, மக்களின் எதிர்பார்ப்புகளை முற்றிலுமாக சிதைத்த உரை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, “இது அரசாங்கத்தின் திறமையற்ற தன்மையையும் தோல்வியையும் நிரூபிக்கிறது” என்றார். மாத்தளை, லக்கல வைத்தியசாலைக்கு நேற்று (27) மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கிய நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கொரோனா தொற்றாளர் தப்பியோட்டம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, களுத்துறை, நாகொட வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த இளைஞன், அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

களுத்துறை தெற்கு பன்விலவைச் சேர்ந்த 27 வயதான இளைஞனே, நேற்று முன்தினம் (26) இரவு 7.45 மணியளவில் தப்பியோடிவிட்டார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2

# ‘இரும்பு கொள்கை சட்டத்தை உடன் உருவாக்க வேண்டும்’

## வஜிர தெரிவிப்பு: ரணிலின் மீள் பிரவேசத்துக்கும் விளக்கம்



“சுதந்திரத்தின் பின்னர், எமது நாடு பலவற்றை இழந்துள்ளது” எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, “இந்த நாட்டைக் கட்டியெழுப்ப 10- 15 வருடங்கள் செல்லலாம். அதற்காக இரும்பைப் போன்ற பலமிக்க கொள்கை சட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அதற்காகவே ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்துக்கு சென்றுள்ளார்” என்றார்.

தொடர்ச்சி P2

# ‘தேசிய நினைவு சின்னமாக இராமர் பாலத்தை அறிவிக்கவும்’



இராமர் பாலம், தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அது உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் இடம்பெற வேண்டும் எனவும் இந்தியாவின் மத்திய கலாசார மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகலாத் பட்டேல் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# இலங்கை கடல் எல்லையை கடந்தது ‘மெஸினா’

தீப்பற்றிய *MSC Messina* கப்பல், நாட்டின் கடல் எல்லைக்கு அப்பால் சென்றுள்ளது என இலங்கை கடற்படை தெரிவித்தது.

குறித்த கப்பல், நேற்று (27) காலை 5.30 மணியளவில் பயணத்தை ஆரம்பித்ததாக கடற்படைப் பேச்சாளர் இந்திக்க டி சில்வா தெரிவித்தார்.

சிங்கப்பூர் நோக்கி, டக் படகின் மூலமே கப்பல் இழுத்துச் செல்லப்படுவதாகக் கடற்படை தெரிவித்தது.

கப்பலில் பரவிய தீ, கப்பல் ஊழியர்களால் நேற்று முன்தினம் (26) கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தென் கடற்பரப்பின் மகா ராவணா வெளிச்ச வீட்டிலிருந்து கிழக்கே 480 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, *MSC Messina* கொள்கலன் கப்பலில் தீ பரவியது.

தொடர்ச்சி P2

# தெற்கில் தடுப்பூசியை ஏற்றிய 425 பேர் மேற்கை சேர்ந்தவர்கள்

காலியில் அஸ்ட்ராஜெனெகா இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களில் 425 பேர், மேல் மாகாணத்தில் இருந்து சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ஜூன் 5, 7ஆம் திகதிகளில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.




தொடர்ச்சி P2

# E – Channeling ஊடாக பதிந்தவர்களுக்கு சேவை

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் சேவைகள் சுகாதார வழிகாட்டல்களின் கீழ், இன்று (28) முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

*E – Channeling* ஊடாக நேரம் ஒதுக்கிக்கொண்டவர்களுக்கு மாத்திரம் இன்று முதல் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் சேவைகள் மீள ஆரம்பிக்கப்படுவதாக நிறுவனத்தின் தலைவர் டொக்டர் சவிந்திர கமகே தெரிவித்தார்.

எனினும், வேரஹெர, பொலன்னறுவை,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சிலுவையில் அறைந்த பூசாரி குழுவுக்கு வலை

பேஸ்புக்கில் சேறு பூசியதாகக் கூறப்படும் இவ்விரு இளைஞர்களையும், தன்னுடைய வீட்டுக்கு அந்த பூசாரி அழைத்துள்ளார். அதன்பின்னர், அம்பிட்டிய பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று. அங்கிருந்த சிலருடன் சேர்ந்தே அவ்விருவரையும் கடுமையாக தாக்கிவிட்டு, இவ்வாறு மிகக் கொடூரமான முறையில், ஆணிகளை ஏற்றி, துன்புறுத்தியுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து அந்த பூசாரியும் ஏனையோரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர் என்றும் பிரதேசத்திலிருந்தும் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவித்த பலகொல்ல பொலிஸார், மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

# தெற்கில் தடுப்பூசியை ஏற்றிய 425 பேர் மேற்கை சேர்ந்தவர்கள்

அதில், பெரும்பாலனவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என கண்டறியப்பட்டது.

காலி நீதவானின் உத்தரவுக்கமைய, தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் காலி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியல் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மேலே குறிப்பிட்ட இரண்டு நாள்களிலும் மொத்தமாக 632 பேருக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் நுவரெலியா, கண்டியைச் சேர்ந்த தலா ஒருவரும் மாத்தறையை சேர்ந்த இருவரும் எல்பிட்டியவை சேர்ந்த 27 பேரும் காலியை சேர்ந்த 90 பேரும் பொலிஸ் அதிகாரிகள் 79 பேரும் அடங்குகின்றனர்.

கடந்த 5 மற்றும் 7ஆம் திகதிகளில் கோவிஷீல்ட் (Covishield) தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்றுக்கொள்வதற்காக மேல் மாகாணத்திலிருந்து பெருமளவானோர் தென் அதிவேக நெடுஞ்சாலையூடாக வாகனங்களில் பயணித்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய, காலி பிராந்திய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைவாக காலி நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமையவே, இந்தத் தகவல் திரட்டப்பட்டது.

# ‘புறப்படுவோருக்கு துரிதமாக தடுப்பூசி ஏற்றப்படும்’

எவ்வாறாயினும், நாட்டில் சினோர்ஃபாம் தடுப்பூசி காணப்படுவதால் அதனை பரிந்துரை செய்யும் நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ‘எமது தந்தையை விடுதலை செய்யுங்கள்’

இந்த சந்திப்பின் போது தமது தந்தையை விடுதலை செய்யுமாறு, ஆனந்த சுதாகரின் மகன் கவிரதன், மகள் சங்கீதா ஆகியோர் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதேவேளை, அரசியல் கைதிகளின் உறவுகளும் அண்மையில் விடுதலையான அரசியல் கைதிகளும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘மூவரும் பெயில் சேரும் பெயில்’

இப்போது நாடு சீரழிந்து விட்டது” என்றார்.

இப்போது, ஜனாதிபதி நகைப்புரியவராக மாறுகிறார். செய்வதற்கு ஒன்றும் இல்லை. எவ்வாறு நாட்டுக்கு டொலர் கொண்டு வருவார், எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்துவார். எவ்வாறு நிவாரணம் வழங்குவார். எரிபொருளை எவ்வாறு கொண்டு வரப்போகிறார் என கேள்வி எழுப்பினார்.

பிரச்சினைகளுக்க அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தவறான தீர்மானம் எடுக்க மாட்டோம்; அவர்கள் செய்த தவறை நாம் செய்யமாட்டோம் எனத் தெரிவித்து அதிகாரத்துக்கு வந்தவர்கள், மீண்டும் மைத்திரிபால சிறிசேனவின் தவறையே செய்கின்றனர்.

எனவே, இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு நாட்டில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இரத்துச் செய்து, பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என தெரிவித்த அவர், 2010-2015 காலத்தில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எடுத்த தீர்மானம் ஆட்சியை தோல்வியடையச் செய்தது. அதேபோல,

2015- 2020 ஆம் ஆண்டுகளுக்கிடையில் ரணில்- மைத்திரி ஆட்சியும் வெற்றிகரமாக அமையவில்லை. அவர்களும் பெயில். இப்போது சேரும் பெயில். எனவே, இந்த நாட்டுக்கு ஜனாதிபதி முறையொன்று அவசியமற்றது என்றார்.

# கொரோனா தொற்றாளர் தப்பியோட்டம்

நோயாளர்கள் தொடர்பில் கணக்கிட்டபோதே, அவ்விளைஞன் தப்பியோடியுள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன், புலனாய்வாளர்களும் பொலிஸாரும் அவ்விளைஞனைத் தேடி வருகின்றனர்.

# ‘இரும்பு கொள்கை சட்டத்தை உடன் உருவாக்க வேண்டும்’

ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று (27) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எமது இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்கு சென்று, தொழில் செய்வதற்கு பதிலாக, எமது நாட்டுக்குள்ளே இளைஞர், யுவதிகள் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதுடன், உலகிலுள்ள இளைஞர், யுவதிகளை இலங்கைக்கு அழைத்து, அவர்களுக்கு எமது நாட்டில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, முன்னோக்கி செல்வதே ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த இலக்காகும் என்றார்.

எனவே, மக்கள் இந்தக் காரணங்களை நன்றாகப் புரிந்து, மிகவும் தெளிவுடன் செயற்பட வேண்டும். அப்படியில்லையாயின் அவர்கள் இதை இலவசமாகத் தருகிறார்கள்; அதை இலவசமாகத் தருகிறார்கள் என தெரிவித்து, நகைச்சுவையாளர்களிடம் எதிர்காலத்தைக் கையளிப்பது சிறந்ததல்ல என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்னோக்கி செல்வதற்கான வழியுண்டு. இந்த நாள்களில் கட்சியின் தலைவரும் நாமும் இது குறித்தே திட்டமிடுகின்றோம்.

> **“ இன்று எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கடந்த நான்கரை வருடங்களாக செய்த நன்மைகள் எல்லாம் தோல்வியடைந்த விடயங்களை நாங்கள் செய்ததாகவும் கூறுகின்றனர்**

அது குறித்து எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம். இந்தச் சமூகத்தில் பாரிய புரட்சியை நாம் ஏற்படுத்துவோம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

ரணில் விக்கிரமசிங்க சிரேஷ்ட அரசியல்வாதியின் இலட்சணமானது, பொதுமக்களை ஏமாற்றவில்லை. பொதுமக்களிடம் பொய் கூறவில்லை. எப்போதும் உண்மையையே பேசினார். உண்மையைப் பேசி தோல்வியைடைந்து வீட்டுக்குச் சென்றார்.

இன்று எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கடந்த நான்கரை வருடங்களாக செய்த நன்மைகள் எல்லாம் தோல்வியடைந்த விடயங்களை நாங்கள் செய்ததாகவும் கூறுகின்றனர். அப்படி செய்ய வேண்டாம். அது தவறு. ஒற்றுமையுடன் பொறுப்புடன் வேலை செய்ய வேண்டும். எவரும் தூரமாக வேண்டாம். நெருங்கியிருந்து வேலை செய்ய வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணக்கருவாகும் என்றார்.

# இலங்கை கடல் எல்லையை கடந்தது MSC Messina கப்பல்

1995ஆம் ஆண்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு, லைபீரிய கொடியுடன் பயணிக்கும் MSC Messina கப்பல், தென்னாபிரிக்காவின் டேர்பன் துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது, கடந்த 22ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது.

அதன் பின்னர் அக்கப்பல், மறுநாள் 23ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது.

கப்பலில் 28 பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் ஒருவர் காணாமல் போயுள்ளார் என இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரை மேற்கோள்காட்டி, அந்நாட்டு ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘தேசிய நினைவுச் சின்னமாக இராமர் பாலத்தை அறிவிக்கவும்’

இராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருவதாகவும் தனிப்பட்ட முறையில் தனக்கும் அதில் விருப்பம் இருப்பதாகவும் இந்தியாவின் மத்திய கலாசார மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகலாத் பட்டேல் கூறியுள்ளார்.

இந்திய நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், இராமர் பாலம் தொடர்பாக மேலும் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தின் இராமேஸ்வரம் மற்றும் இலங்கையின் மன்னார் தீவுகளுக்கு இடையே உள்ள ஆழமற்ற திட்டு போன்ற பகுதியே இராமர் பாலம் என அழைக்கப்படுகிறது.

இராமர், இலங்கை வரும்போது வானரப் படைகளின் உதவியோடு கடலில் பாலம் அமைத்ததாக இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தை செயற்படுத்தி இராமர் பாலம் வழியாக கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்க வேண்டும் என இந்தியாவில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இராமர் பாலம் சேதமடைந்து விடும் என பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட இந்து அமைப்புகள் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தன.

இந்த நிலையிலேயே மத்திய அமைச்சர் பிரகலாத் பட்டேல் ராமர் பாலத்தை தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# E – Channeling ஊடாக பதிந்தவர்களுக்கு சேவை

நுவரெலியா மற்றும் களுத்துறை கிளைகளின் சேவைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த கிளைகளில் நேரம் ஒதுக்கிக்கொண்டவர்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘திறமை இன்மையும் விரக்தியையுமே ஜனாதிபதியின் உரை எடுத்தியம்புகிறது’

தொடர்ந்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் சார்பாக செய்யப்பட வேண்டிய ஆறு அவசர செயல்கள் குறித்து ஜனாதிபதியின் கவனத்தை ஈர்ப்பதற்காக தான் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி, நேற்று ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டதாகவும், அவை தொடர்பாக குறைந்த பட்ச கவனத்தையேனும் ஜனாதிபதி செலுத்தவில்லை என்றும் இதன்போது தெரிவித்தார்.

# திருச்சி சிறையில் போராட்டம் நடத்தும் அகதிகளை மாவட்ட ஆட்சியர் சந்தித்தார்



தமிழ்நாடு திருச்சி சிறப்பு முகாம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள், தங்களுடைய விடுதலையை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

18 ஆவது நாளாகவும் இவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டு வருவதால், மாவட்ட ஆட்சியர், திருச்சி சிறைக்கு சென்று அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டுள்ளதுடன் அவர்கள் விடுதலை சம்பந்தமான நடவடிக்கையை எடுக்க முயற்சிப்பதாக கூறி விட்டுச் சென்றுள்ளதாக போராட்டம் நடத்தும் இலங்கை தமிழ் அகதிகள் தெரிவித்துள்ளார்கள்.

மாவட்ட ஆட்சியர் அறிவிப்பை வெளியிடுவார் என்ற நம்பிக்கையில் காத்திருப்பு போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தியாவில் அகதிகளாக உள்ள எங்களை சிறப்பு முகாமில் அடைப்பு ஏன்? போராட்டக்காரர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

நீதிமன்றத்தில் தண்டனை முடித்தவர்களை மீண்டும் சிறையில் அடைப்பது ஏன்? அனைவரையும் குடும்பங்களுடன் இணைத்து விடுதலைசெய்யுமாறு தமிழக முதல்வருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.















ஆளுங்கட்சிக் கூட்டத்தில்

## ‘சாகர எப்படி சுகம்’

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்துக்கும் இடையில் மோதல் நிலை ஒன்று உருவாகியுள்ள நிலையில், கடந்த வாரம் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொண்டுள்ளனர்.


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தின்போதே சாகரவும், கம்மன்பிலவும் சந்தித்துக்கொண்டனர்.

ஆளுங்கட்சிக் கூட்டத்துக்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் கம்மன்பிலவும் கலந்துகொண்டார். இதன்போது கூட்டம் நடைபெறும் அறையின் கதவருகில், நின்று கொண்டிருந்த சகார காரியவசத்தை பார்த்த கம்மன்பில, “சாகர எப்படி சுகம்” என்று வினவியுள்ளார்.

இதற்கு சாகரவிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை எனவும்,சாகரவை நினைக்கும்போது உண்மையில் கவலையாக இருக்கிறது. ஏனென்றால், எரிபொருள்களின் விலை அதிகரிப்பைக் காரணங்காட்டி, நான் பதவி விலக வேண்டுமென எழுதிக் கொடுத்த கடிதத்தில் சாகர கையெழுத்திட்டுள்ளார் என இதன்போது கம்மன்பில, வாசுவிடம் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுப் பிரச்சினையை

## ‘பசிலால் தீர்க்கமுடியாது’



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவால், நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியாதெனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க, பசிலால் எரிபொருள்களின் விலையை குறைக்க முடியுமெனக் கூறுவது நகைப்புக்குரியதெனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க, கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும், பசில் ராஜபக்ஷ, நாட்டுக்கு வந்தவுடன் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்ந்துவிடாது. பசில் வந்தால் எரிபொருள்களின் விலையை குறைப்பார்கள் எனச் சிலர் கூறுகிறார்கள். இது உண்மையில் நகைப்புக்குரியது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், எரிபொருள்களின் விலையைக் குறைப்பது என்றால், எப்போதோ குறைத்திருக்கலாம். அதனை குறைக்க பசில் வரத்தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு

## ‘சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டாம்’

அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றும், ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளக்கூடாதென, நிதி அமைச்சு அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்சார சபையின் கடன்கள், ஆயிரம் பில்லியனைத் தாண்டியுள்ளது. நட்டத்தில் இயங்கிவரும் இந்நிறுவனத்தை இலாபமடையச் செய்ய எந்தவிதமான திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் நிதி அமைச்சின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நட்டத்தில் இயங்கிவரும் மின்சார சபை, நீர் வழங்கல் அதிகார சபை ஆகியன தொடர்பில் நிதி அமைச்சு அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## ‘ஹெலிகப்டர் வாங்குமளவுக்கு வசதியில்லை’



தான் ஹெலிகப்டர் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி, போலியெனத் தெரிவிக்கும் முன்னணி வர்த்தகர் டட்லி சிறிசேன, கொரோனா வைரஸ் நிலைமைகளால் தனது வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னணி வர்த்தகர் என்பதால், என் மீது சிலர் சேறு பூசும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். நான் ஹெலிகப்டர் ஒன்றை வாங்கியுள்ளதாக செய்திகளில் வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்றார்.

ஹெலிகப்டர் ஒன்றை வாங்கி, ஊர் சுற்றும் மனநிலை என்னிடம் இல்லை. அப்படியே ஹெலிகப்டர் வாங்குவதாக இருந்தாலும், அதற்குப் பெருமளவில் பணம் தேவை. கொரோனா வைரஸ் நிலைமைகளால் எனது ஹோட்டல், அரிசி வர்த்தகங்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் என்னால் எப்படி ஹெலிகப்டர் வாங்க முடியும்? எனவும் அவர் வினவியுள்ளார்.

# ‘நான் அஞ்சமாட்டேன்’



தற்போதைய அரசாங்கத்தை தாமே உருவாக்கியதாகத் தெரிவிக்கும் வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில, தாம் உருவாக்கிய அரசாங்கத்தைவிட்டு ஒருபோதும் வெளியேறப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில, ஐக்கிய மக்கள் சக்தியால் தனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால், தனக்கு எந்தவிதமான அச்சமும் இல்லை. இது எனக்கு எதிராகக் கொண்டுவரப்படும் முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்காக அரசாங்கத்திலிருக்கும் பலர் எனக்கு ஆதரவாக இருக்கிறார்கள். யார் என்ன தான் கூறினாலும், அரசாங்கத்துக்குள் இருக்கும் பெரும்பாலானவர்கள் எனக்கு ஆதரவளிக்கிறார்கள் என்றார்.

பசில் ராஜபக்ஷ, நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டிருக்காது எனக் கூறும் கருத்துத் தொடர்பிலும் பதிலளித்துள்ள கம்மன்பில, எரிபொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பில் பசில் ராஜபக்ஷவிடம் மாற்றுத் திட்டங்கள் இருந்தால், அதனை அவர் என்னிடம் கூறலாம். அதனை செயற்படுத்தத் தயாராக இருக்கிறேன். ஆனால், அவர் இதுவரையில் எந்தவிதமான மாற்று வழிகளையும் என்னிடம் முன்வைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பட்டியல் மூலம் நியமனம்;

## காலஎல்லை தொடர்பில் சட்டம் கட்டாயம்



உள்ளூராட்சி மன்றங்களுக்கு, மேலதிக பட்டியலின் ஊடாக நியமிக்கப்படும் பிரதி நிதிகளுக்கு உத்தியோகபூர்வ கால எல்லை தொடர்பாக உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள நிறைவேற்றுப் பணிப்பாளர், உள்ளூராட்சி மன்ற புதிய தேர்தல் சட்டத்தின் மூலமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கடந்த காலங்களை விட, அதிகமான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் வட்டார ரீதியாகவும் நேரடியாகவும் தேர்தலில் போட்டியிட்டும் அதேநேரம் அந்தக் கட்சிகள் பெறக்கூடிய வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் மேலதிக பட்டியல் ஊடாகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுகிறார்கள் என்றார்.

> “தேசிய பட்டியலின் ஊடாக நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ கால எல்லைகள் தொடர்பாக ஆராய்வது மிக முக்கியமானது

இவ்வாறு மேலதிக பட்டியலின் ஊடாக, உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியமிக்கப்படுகின்ற பிரதிநிதிகளை, வருடாவருடம் விலகக்கூறி, புதிய உறுப்பினர்களை நியமிக்கின்ற ஒரு செயற்பாடுகளை சில கட்சிகளும் குழுக்களும் பின்பற்றி வருகின்றன.

இதனால், தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பாக ஆராய்கின்ற போது தேசிய பட்டியலின் ஊடாக நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ கால எல்லைகள் தொடர்பாக ஆராய்வது மிக முக்கியமான விடயமென நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

கண்டியில் இருப்பதால்

## ‘தலதா தப்பியது’

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கட்டடம் உள்ளிட்ட பல கட்டடங்களை, வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிவித்த எல்லே குணவங்ச தேரர், நல்லவேளை, தலதா மாளிகை கொழும்பில் இல்லை. கொழும்பில் இருந்திருந்தால், அதனையும் விற்பனை செய்திருப்பார்கள் எனத் தெரிவித்தார்.

எல்லே குணவங்ச தேரர் தொடர்ந்த கருத்து தெரிவிக்கையில், பெரும் எதிர்பார்ப்புகளுடன் ஆட்சி அமைக்கக் கொண்டுவரப்பட்ட இந்த அரசாங்கம், தற்போது நாட்டு மக்களுக்கு எதிரான செயற்பாடுகளையே முன்னெடுக்கிறது. நாட்டின் சுபீட்சத்துக்காகவே அரசாங்கம் செயற்படுவதாகக் கூறிக்கொண்டாலும், அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தைவிட தற்போதைய அரசாங்கம் பாரியளவில் நாட்டின் சொத்துகளை விற்பனை செய்து வருவதாகவும், நல்லவேளை தலதா மாளிகை கொழும்பில் இல்லை. கொழும்பில் இருந்திருந்தால், அதனையும் விற்பனை செய்திருப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளங்கள் தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் மிகுந்த விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்காக நாடு இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை

# ‘கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்’

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, எப்போது விவாதத்துக்கு எடுப்பதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கேட்டதற்கு, “அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். இதன்படி, கட்சித் தலைவர்களின் கூட்டம் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது கலந்துரையாடி, நம்பிக்கையில்லாப் பிரேரணை, எப்போது விவாதத்துக்கு எடுப்பதென தீர்மானிக்கப்படுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை வழங்கியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

## இயற்கை உர தொழிற்சாலை யாழில் திறந்துவைப்பு

எஸ்.நிதர்ஷன்


யாழ்ப்பாணம், வடமராட்சி, முள்ளி பகுதியில், சுமார் 230 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை, நேற்று (27) மாலை 4 மணியளவில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எம்.ஏ.சுமந்திரன், த. சித்தார்த்தன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஜப்பான் நாட்டின் 'ஜெய்க்கா' நிறுவனத்தின் உதவி மூலம் நிர்மாணிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையில், நாளொன்றுக்கு 50,000 கிலோ கிராம் உரத்தை உற்பத்தி செய்ய முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இந்தத் தொழிற்சாலை மூலம், அருகிலுள்ள பிரதேச சபைகளின் குப்பை பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.





பி.சி.ஆர் முடிவுகளில் சர்ச்சை;

## 41 ஊழியர்கள் தனிமை

நீர்கொழும்பு, கட்டுவை பிரதேசத்தில் தனியார் நிறுவமொன்றில், வைத்திய அதிகாரி காரியாலயத்தால், 300 ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 41 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக வந்த பின்னர், குறித்த தொற்றாளர்களை, தனியார் வைத்தியசாலையில் பி.சி. ஆர். பரிசோதனை செய்தபோது, அவர்களில் நான்கு பேருக்கு மாத்திரமே தொற்று உள்ளாகி இருப்பது தெரிய வந்துள்ளது.

இதனால், இரு தரப்பினர்களுக்கு இடையேயும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தால் கம்பஹா மாவட்ட சுகாதார வைத்திய காரியாலயத்துக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய, தொற்றுக்குள்ளான 41 பேரையும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்குமாறும் பின்னர், தனிமைப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறித்த தனியார் நிறுவனமும் இணக்கம் தெரிவித்ததாக பொதுச் சுகாதார அதிகாரி சமீர தெரிவித்தார்.

இணைப்புக் காலம் முடிவடைந்த பின்

## நிரந்தரப் பணி இடங்களுக்கு மீள வேண்டும்



தங்களது நிரந்தர பணி இடத்திலிருந்து தற்காலிகமாக, வேறொரு பாடசாலையுடன் இணைக்கப்பட்டு, இணைப்புக் காலம் முடிவடைந்த ஆசிரியர்கள், மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அவர்களின் நிரந்தரப் பணி இடங்களுக்கு, மீள வேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் கபில சி பெரேரா;

நாட்டில் நிலவும் கொரோனா தொற்றுச் சூழல் காரணமாக, நாட்டில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், நிரந்தரப் பணி இடத்திலிருந்து, தற்காலிகமாக வேறொரு பாடசாலையுடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள், இணைப்புக் காலம் முடிவடைந்த பின்னர் பாடசாலைகள் ஆரம்பித்ததும், நிரந்தரப் பணி இடத்துக்குச் செல்ல வேண்டும் என்றார்.

மேலும், மீண்டும் இணைப்பை நீட்டிக்க விரும்பினால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தனது நிரந்தரப் பணி இடத்திலிருந்து அதிபரின் பரிந்துரையுடன் விண்ணப்பத்தை கல்விப் பணிப்பாளர் ஊடாக (ஆசிரியர் இடமாற்றம்) அனுப்பி வைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.


**PUBLIC NOTICE BY NATIVEWAY (PVT) LTD.**



**STANLEY JOHNSON ALEX**

This is to inform our suppliers, the clientele and the general public that Mr. Stanley Johnson Alex (bearing NIC No. 812632094V) with the last known residence address No. 291/1A, Negombo Road, Thudella, Ja-ela ,whose picture appears was involved in a fraudulent activity and he has vacated from our premises on his own without any clearance or settlement on 05th May 2021 from NativeWay (Pvt) Ltd.

Mr. Stanley Johnson Alex will no longer represent our company as Debt Collector or in any other capacity and any transaction made by him on behalf of the company will not be honored by the company and shall not bind us. Please report immediately of any such unauthorized activity to 0770136071 / 0777643367.

Thank You,
NATIVEWAY MANAGEMENT

NATIVEWAY (PVT) LTD
549, SRI SANGARAJA MAWATHA, COLOMBO 10
TEL : 94 11 2324242 FAX : 94 11 2336 802

திருச்சி சிறையில் போராட்டம்:

## அகதிகளைச் சந்தித்தார் மாவட்ட ஆட்சியாளர்

செ.கீதாஞ்சன்



தமிழ்நாடு, திருச்சி சிறப்பு முகாம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள், தங்களது விடுதலையை வலியுறுத்தி முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம், நேற்று (27) 18ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இதன்போது, நேற்றைய தினம் மாவட்ட ஆட்சியாளர் திருச்சி சிறைக்குச் சென்று, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன், அவர்கள் விடுதலை சம்பந்தமான நடவடிக்கையை எடுப்பதாகவும் கூறினார்.

இது தொடர்பான சாதகமான அறிவிப்பு வெளியாகும் வரை, இந்தப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என, போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

## ‘விடுதலையான 16 பேரில் ஒருவர்கூட கிழக்கில் இல்லை’

வி.ரி.சகாதேவராஜா



ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட 16 தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவர்கூட, கிழக்கைச் சேர்ந்தவர் இல்லை என்பது கவலைக்குரிய விடயம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒரு ஜனநாயக விரோத சட்டமாகும். அச்சட்டத்தை முழுமையாக நீக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இத்தடைச்சட்டத்தை நீக்கி நாட்டில் நிரந்தர அரசியல்தீர்வைக் கொண்டுவாருங்கள். அப்போது நாட்டில் குழப்பமும் வராது போராட்டமும் இருக்காது. ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை நிறுத்தப்படுமென்ற அழுத்தமே இன்று தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவைத்திருக்கின்றது. எனினும், விடுதலை செய்யப்பட்ட 16 பேரில் ஒருவர்கூட கிழக்கைச் சேர்ந்தவர் இல்லை.

அண்மையில் முள்ளிவாய்யக்கால் நினைவேந்தல் சம்பவத்தில் மட்டக்களப்பு, கிரானைச் சேர்ந்த 10 பேர் கைதுசெய்யப்பட்டு, இதே சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அதேபோல், பேஸ்புக்கில் தவறாகப் பதிவிட்டார்கள் என்ற பெயரிலும் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களெல்லாம் விடுதலை செய்யப்படவேண்டும். எது எவ்வாறெனினும், ஜனாதிபதியின் செயற்பாட்டை நாம் வரவேற்கிறோம். 16 பேர் மட்டுமல்ல, அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்” என்றார்.

இரணைத்தீவு மக்களுக்கு

# மலேரியா பரிசோதனை

மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இரணைத்தீவு மக்களுக்கு, அண்மையில், மலேரியா பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மலேரியா தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் மாவட்ட உளநல மருத்துவ அதிகாரியுமான மா. ஜெயராஜா தலைமையிலான மருத்துவக் குழுவினர், இரணைத்தீவுக்குச் சென்று, அங்கு வசிக்கின்றவர்களின இரத்த மாதிரிகளைப் பரிசோதனைக்காக பெற்றுள்ளனர்.

இலங்கை - இந்தியாவுக்கு இடைப்பட்ட கடலில், இரணைத்தீவு தனித்தீவாக இருப்பதால், இந்தியாவில் தற்போதும் தாக்கத்தை செலுத்துகின்ற மலேரியா, சில வேளைகளில், இரணைத்தீவுக்கும் பரவியிருக்கலாமென்ற சந்தேகத்தின் அடிப்படையில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இரணைத்தீவில் குடியேறி வசித்து வருகின்ற மக்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையை மலேரியா இல்லாத நாடாக உலக சுகாதார ஸ்தாபனம் 2016ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆயுதக் கலாசாரத்தை

# ‘ஒழிக்க வேண்டும்’

எச்.எம்.எம்.பர்ஸான்

“அப்பாவி இளைஞர்களின் இறப்புகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் உட்பட பலரும் ஆயுதப் போராட்டம் வேண்டாம் என்று முடிவெடுத்து வந்திருந்தோம்” எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கருணா அம்மான், “இந்த ஆயுதக் கலாச்சாரத்தை ஒழிக்க வேண்டும்” என்றார்.

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற கொலைச் சம்பவத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துரைக்கையில், அப்பாவி இளைஞனின் உயிர் பறிக்கப்பட்ட விடயமானது, பொறுப்பற்ற விடயமாகத்தான் பார்க்கின்றோம். இது முற்றுமுழுதான ஒரு கொலை. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதற்கான நீதி கிடைக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நாங்கள் எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பியுள்ளோம்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் முன்னுக்குப்பின் முரணான செய்திகளை வெளியிட்டு, சம்பவத்தை மறைக்க முற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தனது வீட்டில் பொருத்தப்பட்ட சி.சி.டி.வி கமெரா வேலை செய்யவில்லை என்பது சிறுபிள்ளைத்தனமான மூடிமறைப்பாகும் என்றார்.

சீனப் பண்ணைக்கு

## ‘அனுமதி பெறப்படவில்லை’



மு.தமிழ்ச்செல்வன்

பூநகரி, கௌதாரிமுனை கடற்பரப்புக்குள் சீன நிறுவனம் அமைத்துள்ள கடலட்டை பண்ணை, எவ்வித அனுமதியும் பெறப்படாமலேயே அமைக்கப்பட்டுள்ளதென, பூநகரி பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

கௌதாரிமுனை கடற்பரப்புக்குள் சீன நிறுவனமொன்று, அனுமதியின்றி கடலட்டை பண்ணை அமைத்து, வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றது என, பிரதேச கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பூநகரி பிரதேச செயலாளரிடம் வினவிய போதே. குறித்த கடலட்டைப் பண்ணை தொடர்பில் பூநகரி பிரதேச செயலகத்தில் எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என்றார்.

## யாழில் கொரோனா சிகிச்சை பெற்று வந்த இருவர் பலி

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா தொற்றாளர்கள் இருவர், வெள்ளிக்கிழமை (25) உயிரிழந்துள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த 62 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரும் மன்னாரைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவருமே. இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இருவரினதும் சடலங்களும், உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மின்தகனம் செய்யப்பட்டன.

அரச உத்தியோகத்தர்களுக்கான

## பஸ் சேவை இன்று முதல் ஆரம்பம்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள், இன்று (28) தொடக்கம் இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இச்சேவை, மட்டக்களப்பு பஸ் நிலையத்திலிருந்து காலை 05.40 இற்குப் புறப்பட்டு, திருகோணமலையைச் சென்றடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி சாலையிலிருந்தும் காலை 6 மணிக்கு திருகோணமலைக்கான பஸ் சேவை இடம்பெறுமென சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

நான்கு நாள்களாக

## கரை திரும்பாத மீனவர்கள்




எம்.எஸ்.எம்.ஹனீபா

பொத்துவிலில் பிரதேசத்திலிருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் நான்கு நாள்களாகியும் இதுவரை வீடு திரும்பவில்லையென உறவினர்கள் தெரிவித்தனர்.

பொத்துவில், அறுகம்பை மீன்பிடித் துறையிலிருந்து புதன்கிழமை (23) அதிகாலை, இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களே, இவ்வாறு காணாமல் போயியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில், களப்புக்கட்டு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான மொஹமட் தாஹா, பொத்துவில், பசறிச் சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதுடைய மொஹமட் ஜௌபர் என்பவரும் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போன இரண்டு மீனவர்களையும் மீனவர்கள், கடற்படையினர்கள் இணைந்து தேடி வருவததோடு, மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## சிறுமிக்கு சிறுநீரகம் தேவை

றொசேரியன் லெம்பட்

மன்னார், எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த, எம். டன்சிக்கா (வயது 6) என்ற சிறுமிக்கு, அவசரமாக A+ வகை குருதி பிரிவைச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்டுள்ள இச்சிறுமிக்கு மாற்று சிறுநீரக சத்திரசிகிச்சை செய்யுமாறு, வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுநீரகம் வழங்க விரும்பும் நல்ல மனம் படைத்தவர்கள் வழங்கி உதவினால், சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தானஞ்செய்ய விரும்புபவர்கள், 077- 6975133 எனும் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தடுப்பூசி செலுத்திக்கொண்ட

## 20 பேருக்கு ஒவ்வாமை

சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்




கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் பலர், ஒவ்வாமை காரணமாக, மயக்கமடைந்த நிலையில், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (26) வரை, இவ்வாறு 20 பேர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை விட, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பலர், தர்மபுரம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியபோது சிலருக்கும் வீடுகளில் இருந்த சிலருக்கும், இவ்வாறு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இவர்களில் 16 பேர் சிகிச்சை பெற்று தற்போது வீடு திரும்பியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, நிர்வாகம் ஆடைத் தொழில்சாலையின் நடவடிக்கைகளை நிறுத்தி, பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பிவைத்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் 1,126 ஊழியர்களில் இதுவரை 900 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதுடன், சிலர் விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் தடுப்பூசி செலுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வாடகை அறவீடுகளில்

## ‘சலுகைகள் வழங்கவும்’

நூருள் ஹுதா உமர்

நாட்டின் தற்போதைய கொரோனா சூழ்நிலை கருதி, வர்த்தக நிலையங்களை வாடகைக்கு வழங்கிய உரிமையாளர்கள் விலைக்கழிவு சலுகைகளை வழங்க முன்வர வேண்டுமென அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் எஸ்.எம்.சபீஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,“கொரோனாவின் பாதிப்புகள் ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி என அனைவரது பொருளாதாரத்தையும் வீழ்த்தியுள்ளது. வசதிபடைத்தோரால் இந்நிலைமையை எதிர்கொள்ள முடிந்தாலும் தொழிலாளர்கள் இதை எதிர்கொள்வதில் பெரும் சிரமங்களை அனுபவிப்பதை எம்மால் காண முடிகின்றது.

இந்நிலையில், வர்த்தக நிலையங்களை வாடகைக்கு வழங்கிய கட்டட உரிமையாளர்கள் விலைக்கழிவுகள், சலுகைகள் அடிப்படையில் வாடகைகளைப் பெற முன்வரவேண்டும் என்றார்.

மட்டக்களப்பு

## ‘சிறைச்சாலையிலிருந்து சேதனப் பசளை உற்பத்தி’

க.விஜயரெத்தினம், எம்.எஸ்.எம்.நூர்தீன்



‘மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து விவசாய நிலத்துக்கு சேதனப் பசளை, காய்கறி உற்பத்திகள்’ எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி உற்பத்திகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள், மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (26) ஆரம்பிக்கப்பட்டன.

சிறைச்சாலை ஆணையாளர் துசார உப்புல்தெனிய தலைமையில், மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சொந்தமான திருப்பெருந்துறையிலுள்ள 23 ஏக்கர் பண்ணையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. விவசாய அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகேவின் பங்குற்றலுடன் நிகழ்வு நடைபெற்றது.

“இன்னும் 10 வருடங்களுக்கு, நாங்கள் இரசாயனப் பசளைகளை உபயோகித்தோமானால் எங்களுக்குப் பெரிய பிரச்சினைகள் ஏற்படும். இந்த நாட்டில் ஆரம்பத்தில் ஒரு புற்றுநோய் வைத்தியசாலை தான் இருந்தது. எனினும், தற்போது பல புற்றுநோய் வைத்தியசாலைகள் இயங்குகின்றன. அனைத்து வைத்தியசாலைகளிலும் சிறுநீரக பிரிவுள்ளது. இதற்கெல்லாம் காரணம், நாங்கள் இரசாயனப் பசளைகளை உபயோகித்ததுதான். ஆகவே, இதனை நிறுத்துவதற்கு இந்த அரசாங்கம் முடிவு செய்ததே உங்களுக்காகத்தான் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இதன்போது தெரிவித்தார்.

இரசாயன உரம் இல்லாமையால்

# பறிக்கும் கொழுந்தின் நிறையில் வீழ்ச்சி



■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரசாயன உரத் தட்டுப்பாடு காரணமாக, இரத்தினபுரி மாவட்ட சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக, ஓர் ஏக்கருக்கு பறிக்கப்பட்ட 800 கிலோ கிராம் கொழுந்து, 250 கிலோ கிராமாகக் குறைவடைந்துள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இரசாயன உரம் இல்லாமையால், பறிக்கப்படும் கொழுந்தின் நிறை, தரம் ஆகியவை குறைவடைந்து உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சிறு தேயிலை உரிமையாளர்கள், இதனால் தமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்பை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கின்றனர்.

# ‘பட்டினியிலிருந்து காப்பாற்றுங்கள்’

## அரங்கலை தோட்ட மக்கள் கோரிக்கை

■ பி.சிவா

கொரோனா வைரஸ் தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொத்மலை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கெட்டபுலா- அரங்கலைத் தோட்ட மக்கள், தம்மை பட்டினியிலிருந்து காப்பாற்றுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இத்தோட்டத்தில் 31 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், அவர்களில் பலர் தினக் கூலி வேலைகளில் ஈடுபடுபவர்களாக இருக்கின்றனர்.

இந்த நிலையில், கடந்த 24ஆம் திகதி தொடக்கம் இத்தோட்டம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால், தோட்ட மக்கள் ஒருவேளை கூட உண்ண உணவின்றித் தவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இம்மாதம் 21ஆம் திகதி குறித்த தோட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருவர்



தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதால் 31 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

இதனால் தினக்கூலிகளான தாம் தொழிலுக்காக நகர்ப் புறங்களுக்கு செல்ல முடியாத நிலையில், ஒருவேளை உணவுக்குக் கூட கஸ்டப்படுவதாகவும், தம்மை பட்டினியிலிருந்து மீட்குமாறும் தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# குறைபாடுகளுடன் சினிசிட்டா தனிமைப்படுத்தல் நிலையம்

■ டி. சந்ரு


கொரானோ தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்ட நுவரெலியா, சினிசிட்டா மண்டபத்தில் தனிமைப்படுத்தப்படுபவர்களுக்கு, அங்கு போதுமான வசதிகளின்றிக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சினிசிட்டா மண்டபத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமையால் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதுடன், உணவு கூட முறையாக வழங்கப்படுவதில்லை என்றும் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்த போதும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இங்கு சேகரிக்கப்படும் கழிவுகளை குழியொன்றில் போடுமாறு அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், கழிவைப் போடுவதற்கு குழியொன்றை வெட்டிக்கொடுக்கவும் எவரும் முன்வைரவில்லை என்றும் அங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா மாநகர சபைச் செயலாளர் போதிமானவிடம் வினவியபோது, இந்தக் குறைபாடுகள் குறித்து ஆராய சுகாதாரப் பிரிவினர் சம்பந்தப்பட்ட இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.



# கொரோனா செய்தித் துளிகள்

01. வட்டவளை- தியகல தோட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது. (இரா.யோகேசன்)
02. பசறை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 33 தொற்றாளர்கள், நேற்று (27) அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் பிந்துனவெவ, கஹாகொல்ல தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
03. நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை (26) 7,141தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 117 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (பி. கேதீஸ்)
04. பெல்மதுளை, கொடக்கவெல பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் 195 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (ஏ.எம்.எம்.பாயிஸ்)
05. பொகவந்தலாவை நகரில் மாத்திரம் 34 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எஸ்.சதீஸ்)

14 பேருக்கு தொற்று உறுதி;

# கெட்டபுலா மத்திய பிரிவு முடக்கம்



■ பி.சிவா

கொத்மலை-நவதிஸ்பனை பொதுச் சுகாதார பிரிவுக்கு உட்பட்ட கெட்டபுலா மத்திய பிரிவு தோட்டம், நேற்று (27) காலை 6 மணி தொடக்கம் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம், குறித்த தோட்டத்தில் 14 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்தே இத்தோட்டத்தை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் இறம்பொடை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 23ஆம் திகதி, இத்தோட்டத்தைச் சேர்ந்த 26 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையின் போது, 14 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு, நேற்று (27) முதல் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தோட்டத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக நவதிஸ்பனை பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா சடலங்களுக்கான

# தகனக் கட்டணம் குறைப்பு

## நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

■ எஸ்.சதீஸ்



கொரோனாவால் உயிரிழப்பவர்களை தகனம் செய்வதற்கு இனிவரும் காலங்களில் 5,000 ரூபாயே அறவிடப்படுவதற்கு நுவரெலியா பிரதேச சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தவிசாளர் ரவி குழந்தைவேல் தெரிவித்தார்.

25ஆம் திகதி நடைபெற்ற சபையின் மாதாந்த அமர்விலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் கொரோனாவால் உயிரிழப்பவர்களைத் தகனம் செய்ய 15,000 ரூபாய் நோர்வூட் பிரதேச சபையால் அறிவிடப்பட்டு வந்ததாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டதாகத் தெரிவித்த அவர், கொரோனா தொற்றுக்குள்ளாகி, ஒரு மாத சிகிச்சையின் பின்னர், தான் சபைக்குத் திரும்பிய பின்னரே இது குறித்து அறிந்துகொண்டதாகவும் தெரிவித்தார்.

எனவே, இனிவரும் காலங்களில் கொரோனா சடலங்களை தகனம் செய்ய 5,000 ரூபாய் மாத்திரமே அறிவிடத் தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.



# குடியிருப்பை புனரமைக்க...

இரத்தினபுரி, ஹிதெல்லன, சென். ஜோக்கீம் தோட்டத்தில் இயற்கை அனர்த்தத்தால் முற்றாகச் சேதமடைந்த தோட்டத் தொழிலாளி ஒருவரின் குடியிருப்பை புனரமைப்பதற்கான பொருள்கள், ‘இரத்தினபுரி உதவும் கரங்கள்’ அமைப்பின் ஊடாகக் கையளிக்கப்பட்டன.
இந்த அமைப்பின் சார்பாக பால விக்ன கோவில் குருக்கள் க. தர்மகுலராஜா, சப்ரகமுவ மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுப்பிள்ளை ஆகியோரால் இப்பொருள்கள் கையளிக்கப்பட்டன.

முன்பள்ளி ஆசிரியைகளுக்கு

# நிவாரணம் வழங்கப்படவில்லை

■ எம்.கிருஸ்ணா

பெருந்தோட்டப் பகுதிகளில் சேவையாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியைகளுக்கு, அரசாங்கம் இதுவரை எவ்வித நிவாரணங்களையும் வழங்காமையால், அவர்கள் பெரும் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச்செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

திகா- உதயா நிவாரணத் திட்டத்தின் கீழ்,கொட்டகலை பிரதேச பிரிடோ முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்த போதே, மேற்கண்டவாறு



தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொரோனா தொற்றுக்கு மத்தியில் சகலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகையில், பெருந்தோட்டங்களில் முன்பள்ளிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் எவ்வித கொடுப்பனவோ, நிவாரணமோ வழங்கப்படாமல் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே, முன்பள்ளி ஆசிரியைகளுக்கு நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்த அரசாங்கம் இதுவரை எதையும் வழங்காத நிலையிலேயே, பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரத்தின் ஆலோசனைக்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் உதயகுமாரின் நிதிப் பங்களிப்பில் நுவரெலியாமாவட்டத்தில்பிரிடோ அரச சார்பற்ற நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

நல்லாட்சியில் முழுமைப்படுத்தாத

# ‘வீட்டுத்திட்டத்தை முழுமைப்படுத்தவும்’

■ ஜயக்குமார் ஷான்

மொனராகலை மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்டங்களில் கடந்தாண்டு அமைக்கப்பட்டு முழுமைப்படுத்தப்படாமல் கைவிடப்பட்டுள்ள 150 வீடுகளை முழுமைப்படுத்துவதுடன், அதற்கான காணி உறுதிப்பத்திரத்தையும் பெற்றுத்தரும்படி, வீட்டு உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட வீடமைப்பு அமைச்சின் கீழ், இந்திய நிதியுதவியுடன்



அமைக்கப்பட்ட மொனராகலை, பாராவிலை, கும்புக்கனை, வெள்ளச்சிக்கட, முப்பனெவெளி, மரகலை ஆகிய தோட்டங்களில் தனி வீட்டுத்திட்டங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் இதுவரை முழுமைப்படுத்தாமல் உள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிக்கின்றனர்.

அத்துடன், இந்த வீடுகளுக்கான மின்சாரம், நீர் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளின்றிக் காணப்படுவதாகவும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த வீடுகளை பூரணப்படுத்தி அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, வீடுகளுக்கு காணி உரிமத்தைப் பெற்றுக்கொடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சோதனைச் சாவடிகள்

# பொலிஸ் நிலையங்களாக மாற்றம்

■ க. மஹிந்தகுமார், ஏ.ஏ.எம்.பாயிஸ், சி வாணி ஸ்ரீ

பலாங்கொட தேர்தல் தொகுதியில் 35 வருடங்களாக சோதனைச் சாவடியாகக் காணப்பட்ட சமனலவெவ பொலிஸ் சோதனைச் சாவடி, நிரந்தர பொலிஸ் நிலையமாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் நேற்று முன்தினம் (26) திறந்து வைக்கப்பட்டது.

சமனலவாவி நீர்த்தேக்கம்




அமைக்கப்பட்ட போது, அதன் பாதுகாப்புக்காக அவ்விடத்தில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடியே, நிரந்தர பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி வலேபொட, அகில சாலிய எல்லாவல உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல தேர்தல் தொகுதியின் எந்தானை பிரதேசத்திலும் புதிதாக பொலிஸ் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

# இன்னும் கொஞ்சம் விளிப்பாக வழிகாட்டல்களைக் கடைப்பிடிப்போம்

முழுநாடும் ஒரு மாதத்துக்குப் பின்னர் முழுமையாகத் திறக்கப்பட்டாலும், முடக்கப்படும் பிரதேசங்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதே மாதிரியான நிலைமை தொடருமாயின், நாடு திறக்கப்பட்டமை பிழைத்துவிடும்; மீண்டும் முழு முடக்கத்துக்குச் செல்லவேண்டிய நிலைமையே ஏற்படும்.

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தாலும், ஓரளவுக்குப் பொதுப் போக்குவரத்து சேவைகள் நடைபெறுகின்றன. பயணிகளும் ஆசனங்களுக்கு ஏற்பவே ஏற்றப்படுகின்றனர். ஹோட்டல்கள் உள்ளிட்ட அத்தியாவசிய வர்த்த நிலையங்கள் திறக்கப்பட்டு, வர்த்தக செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

சில ஹோட்டல்களில், பொதிச் சேவைகள் மட்டுமே முன்னெடுக்கப்படுகின்றன. இன்னும் சில ஹோட்டல்களில் அமர்ந்திருந்து உணவுகளை உண்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஆக, ஒவ்வொன்றாக வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன. அதனை தற்காத்துக் கொள்ளவேண்டியது, ஒவ்வொருவரினதும் கைகளிலேயே உள்ளது.

சில வர்த்தக நிலையங்களைப் பார்த்தால், அங்கு சனநெரிசலாக இருக்கும். இல்லையேல் முட்டிமோதி, ஒருவருடன் மற்றொருவர் உரசிக்கொண்டிருப்பர்; ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணமாட்டார்கள்; கைகளைக் கழுவுவதை முற்றாக மறந்திருப்பர். ஆனால், முகக்கவசங்களை அணியாதோரைக் காண்பது அரிதாகும்.

கொரோனா வைரஸ் தொற்றின் அச்சம், முற்றுமுழுதாக விட்டோடிவிடவில்லை; கொரோனாவின் வீரியமும் குறையவில்லை. திரிபடைந்து, திரிபடைந்து உருமாறியிருக்கும் கொரோனா வைரஸ், தொற்றாளர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது; மரணங்களும் அதிகரித்துள்ளன.

நாடு, பொதுவான இயக்கத்துக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது என்பதை மறந்து செயற்படுவோமாயின், மீண்டும் முடக்கப்படக்கூடும். நாட்டை முடக்கிவிடாது பார்த்துக்கொள்வது, ஒவ்வொருவரினதும் கைகளிலேயே உள்ளது. ஆகையால், கைகளைக் கழுவி, சுத்தமாக இருப்பதன் ஊடாகவே, நாடு தொடர்ந்தும் திறந்தே இருப்பதை உறுதிப்படுத்தமுடியும்.

ஒவ்வொரு துறையும் இயங்காவிடின், ஏதாவது பாதிப்புகள் ஏற்பட்டுக்கொண்டேதான் இருக்கும். அப்பாதிப்புகள் ஏற்படாதவாறு இருக்க வேண்டுமாயின், சுகாதார வழிகாட்டல்களை இன்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். நாடு முழுமையாகத் திறந்தே இருக்கவேண்டுமாயின் அதைத்தவிர வேறு வழியே இல்லை.

அவ்வழியைப் பின்பற்றாவிடின் வாழ்க்கை வலி நிறைந்ததாக மாறிவிடும். அதிலிருந்து மீண்டெழுவதற்கு, இன்னும் பல வருடங்கள் கூட ஆகிவிடும் என்பதால், அன்றாடம் ஏதாவது கிடைக்கும் வேலைகளைச் செய்வோர், நாள்கூலிகளென சகலரும் பாதிக்கப்பட்டுவிடுவர்; துறைசார் பணியாளர்களும் பாதிக்கப்பட்டுவிடுவர்.

எல்லோரும் வாழவேண்டுமென ஒவ்வொருவரும் சிந்திப்பார்களாயின், கொரோனாவை முற்றாக ஒழிக்க முடியும். அதேபோல, தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்கான ஆர்வத்தையும் மக்களிடத்தில் மென்மேலும் தூண்ட வேண்டும். கொரோனாவைத் தடுப்பதற்கான சிறந்ததோர் ஆயுதம், தடுப்பூசியை தவிர வேறொன்று இருக்கமுடியாது. ஆக, மக்களின் கரங்களிலேயே எல்லாம் இருக்கிறது. அவற்றை முறையாகக் கடைப்பிடிப்பதன் ஊடாகவே, கொரோனாவைத் தோற்கடித்து, வாழ்க்கையில் வெற்றி பெற முயலலாம். இல்லையேல், தொடந்தும் மந்தமான நிலைமையே ஏற்படும் என்பதில் ஐயமில்லை.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

## எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





உண்மையும் உணர்வுமுனைப்பும் அரசியலும்

# உண்மைகளாகும் பொய்கள்



என்.கே. அஷோக்பரன்

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட, உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான மைக்கல் ஒண்டாச்சி, தன்னுடைய நூலொன்றில், 'இலங்கையில் சிறப்பாகச் சொல்லப்பட்ட பொய் ஒன்று, ஆயிரம் உண்மைத் தரவுகளுக்குச் சமன்' என்று குறிப்பிடுகிறார். இதை யார் புரிந்துகொண்டார்களோ இல்லையோ, இலங்கைத் தீவின் அரசியல்வாதிகள், நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்றைய காலகட்டத்தை, 'உண்மையைக் கடந்த, உணர்வுமுனைப்புக் காலகட்டம்' (*Post truth era*) எனச் சிலர் விளிக்கிறார்கள். உணர்வுகள், தனிப்பட்ட கருத்துகளுக்கு, உண்மைகளை விட முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை இது சுட்டி நிற்கிறது.

சமூக ஊடகப் பயன்பாடு, இந்த உண்மையைக் கடந்த உணர்வுமுனைப்புக்குப் பெருந்துணை செய்கிறது. எந்தவொரு தகவலும், அதன் உண்மைத்தன்மை பற்றிய அலசல்கள் எதுவுமின்றி, சமூக ஊடகவெளியில் பதிவிடப்படுவதும், அதன் உண்மைத்தன்மை பற்றிய எதுவித கேள்விகளுமின்றி, அது தனிநபர் உணர்வுகளின்படி, ஏதோ ஒரு வகையில் உண்மை என நம்பப்படும் அடிப்படையில் மட்டும் பலராலும் பகிரப்படுவது, சமூக ஊடகங்களின் நியதியாக மாறியுள்ளது.

தனிமனித உணர்வுகள், உண்மையைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரு வினோத காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

"அரசியலில் பொய் என்பது, புதிய விடயமல்ல! அன்று அளித்த வாக்குறுதி என்பது, அன்றைய காலகட்டத்தின் தேவை; அந்த வாக்குறுதி, இன்று மீறப்பட்டமை, இன்றைய காலகட்டத்தின் தேவை" என்கிறார் நிக்கலோ மாக்கியவலி. அதிகார அரசியலின், அழுக்கான முகத்தின் ஒரு பகுதி இது.

அரசியல், ஜனநாயக மயப்படுத்தப்பட்டதில் இருந்து, அரசியலில் பொய்யின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. தமது அதிகாரத்தை, பிறப்பால் அல்லது செல்வத்தால் மட்டும் தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலையில், வாக்குகளுக்காக மக்களைக் கவர வேண்டிய தேவை இருக்கிறது. ஆகவே, எப்பிரயத்தனப் பட்டேனும், எக்காரியத்தைச் செய்தேனும் மக்களின் வாக்குகளை வேட்டையாடிவிட வேண்டிய தேவையின் விளைவாக, வாக்காளர்களைத் திறமையாகக் கையாள வேண்டிய நிர்ப்பந்தத்தை, அரசியல்வாதிகள் எதிர்கொள்கிறார்கள்.

"இயற்கையாகவே மனிதன், ஓர் அரசியல் விலங்கு" என்று அரிஸ்டோட்டில் கூறுகின்றார். ஆனால், மனிதன் அடிப்படையில் உணர்வுவயப்பட்ட விலங்கும் கூட! தனது சிந்தைனையாற்றல், பகுத்தறிவின் விளைவாக உணர்வுவயப்படுதலை, மனிதனால் கட்டுப்படுத்த முடிந்தாலும், இயற்கையான வடிவமைப்பை முற்றாகக் கட்டுப்படுத்தி விட முடியாது. ஆகவே, மனிதனைக் கட்டுப்படுத்தக்கூடிய பெரும் ஆயுதமாக, மனித உணர்வுகள் இருக்கின்றன. இதை, மிகத்தெளிவாகப் புரிந்தவர்கள் அரசியல்வாதிகள். ஆகவே, மனிதனின் இந்த உணர்வுகளைக் கொண்டு, உண்மைகளைக் கூட மறைக்கும் செப்படி வித்தை, அரசியல்வாதிகளுக்குக் கைவந்த கலை.

அடல்ப் ஹிட்லர், 'க்ரோஸ லூக' (ஜேர்மன் மொழி, 'பெரும் பொய்') எனும் பிரசார உத்தி பற்றித் தன்னுடைய 'மெய்ன் கம்ப்ஃப்' (எனது போராட்டம்) நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இதன் சுருக்கம், ஒரு பொய்யைப் பெரிய அளவில் மீண்டும் மீண்டும் பிரசாரம் செய்யும் போது, அது உண்மை என நம்பப்படும் என்பதாகும். இதை, ஹிட்லரின் வலக்கரமாக இருந்த, 'நாஸிக்களின் பிரசார பீரங்கி' என்று கருதப்பட்ட ஜோசப் கோபெல்ஸ், யூதர்கள் மீதான வெறுப்பை விதைக்கும் பிரசாரத்துக்குப் பயன்படுத்தியிருந்தார்.

யூதர்களைப் பற்றிய பல பொய்கள், கட்டவிழ்த்து விடப்பட்டன. அவை, மீண்டும் மீண்டும் அரசியல் மேடைகளில், பிரசுரங்களில் சொல்லப்பட்டபோது, அதன் உண்மைத் தன்மை பற்றிய சந்தேகங்களைக் கடந்து, வெகுஜனங்களிடையே அது உண்மை என ஏற்றுக்கொள்ளப்படும் நிலை உருவானது. அதுவும், அவை உணர்வு ரீதியில் மக்கள் மீது தாக்கம் செலுத்தும் பொய்யாக இருக்கும் போது, அவை மறுகேள்வியின்றி மக்களை ஆட்கொண்டுவிடுகின்றன.

ஆனால், நாஸிக்களின் காலத்தில் இந்தப் 'பெரிய பொய்'யைச் சாத்தியமாக்க, நாடு முழுவதும் அரசியல் கூட்டங்கள் பெரியளவில் நடத்தப்பட வேண்டிய அவசியமும், இதுதொடர்பான பிரசுரங்கள் வெளியிடப்படுவதும், அது மக்களைச் சென்றடையச் செய்ய வேண்டியதுமான தேவை இருந்தது. ஆனால், இன்றைய சூழல் இதனை இலகுவாக்கி இருக்கிறது. இணைய வசதியுள்ள ஒருவர், தான் இருக்குமிடத்தில் இருந்துகொண்டே, இத்தகைய பிரசாரத்தைச் சாதிக்கக்கூடிய வல்லமையை சமூக ஊடகங்கள் ஏற்படுத்தி இருக்கின்றன. அதன் விளைவாக, மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் பொய்கள், பாதி உண்மைகள் என்பன பெரும் பிரசாரமாக, மக்கள் முன்னிலையில் முன்வைக்கப்படுகையில், அவை மறுகேள்வியின்றி அந்த மக்களை ஆட்கொண்டு விடுகின்றன.

உதாரணத்துக்கு, அபிவிருத்தியடைந்த நாடொன்று பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் காலகட்டத்தில், அந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாகத் தம்மைக் கருதிக்கொள்ளும் பலரும் வேலைகளை இழக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதேவேளை, வளர்முக நாடுகளைச் சேர்ந்த பலர் அந்நாட்டில் குடியேறி, வேலைசெய்து வருகிறார்கள். சாதாரணமாக இவர்கள் செய்யும் வேலைகள், அந்நாட்டின் பூர்வீகக் குடிகளாகத் தம்மைக் கருதிக்கொள்வோர் செய்ய விரும்பாத வேலைகள். அதனால்தான், இந்த வேலைகளுக்கான கேள்வி அதிகரித்து, அதனை நிரப்ப, வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள் அங்கு வரும் வாய்ப்பு எற்பட்டது.

இந்த இடத்தில், பூர்வீகக் குடிகளின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள விளையும் அரசியல்வாதிகள், "எங்களது நாட்டவர்களுக்கு, வேலையில்லை; எங்கள் நாட்டின் வேலைவாய்ப்புகளை அந்நியர்களும் வந்தேறு குடிகளும் தட்டிப்பறித்துக் கொள்கிறார்கள்" என்ற பிரசாரத்தை முன்னெடுக்கிறார்கள். இதில், இவர்கள் சொல்லும் இரண்டு கருத்துகளும் முற்று முழுதான பொய் அல்ல! பூர்வீகக் குடிகளாகக் கருதிக்கொள்பவர்கள் வேலை இழந்திருக்கிறார்கள்; அதேவேளை, பல வேலைகளை வெளிநாடுகளிலிருந்து வந்தோர் செய்கிறார்கள். இந்த இரண்டும் உண்மை.

ஆனால், இந்த இரண்டுக்கும் நேரடித் தொடர்பு உள்ளது போல, இந்த அரசியல்வாதிகள் அதைச் சித்திரிக்கிறார்கள். இங்கு, பொருளாதார நெருக்கடியின் காரணமாகத்தான் வேலையிழப்பு ஏற்பட்டது. ஆனால், வேலை இழப்பால் அவதிப்பட்டுக் கொண்டிக்கும், தமது நாட்டில் குடியேறியவர்கள் மீது ஐயமும் அசூயையும் கொண்டிருக்கும் மக்களிடம், இந்தக் கருத்து உணர்வுரீதியிலான ஏற்புடைமையை ஏற்படுத்திவிடுகிறது. அதைத் தாண்டி, இதன் உண்மைத் தன்மையைப் பகுத்தறிபவர்கள் மிகக் குறைவே!

இத்தகைய பிரசாரம், தினம் தினம் அம்மக்கள் பார்க்கும் சமூக ஊடகங்களில், அரசியல்வாதிகளால் மட்டுமன்றி, இந்த எண்ணத்தால் கவர்ந்திழுக்கப்பட்ட சாதாரணர்களாலும் பகிரப்படும் போது, இந்தப் பொய், அது பொய்யானாலும் கூட, உணர்வு முனைப்பால் வெகுஜனங்களிடம் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறது.

இலங்கை அரசியலும், இந்த உண்மையைக் கடந்த உணர்வுமுனைப்புக்கு விதிவிலக்கல்ல! தமிழர்கள் மீதான வெறுப்பு என்பது, இங்கு அரசியல் பிரசாரமாகவே உருவெடுத்தது. இன்றைய இலங்கையின் இனப்பிரச்சினை என்பது, அரசியலும் அதன்வழியான பொய்ப் பிரசாரங்களும் உருவாக்கிய ஒன்று!


சிங்கள-பௌத்த தேசியவாதம் மட்டுமல்ல, தமிழ்த் தேசியவாதம் கூட, இதற்கு விதிவிலக்கல்ல. ஓர் உதாரணம் சொல்வதென்றால், அல்பிரட் துரையப்பாவை பலரும் 'துரோகி' என்கிறார்கள். காரணம், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நடந்த கொடும் வன்முறைத் தாக்குதலுக்கு, அவர்தான் காரணம் என்கிறார்கள்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் நடந்த தாக்குதலுக்கு, சிறிமாவோ அரசாங்கம் தான் பொறுப்பு என்பதில் துளியும் சந்தேகமில்லை. ஆனால், அதன் பின்னணியில் அல்பிரட் துரையப்பாதான் இருந்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. இதைப்பற்றி மிக விரிவாக, 'தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்ன' என்ற தொடரில் எழுதியிருந்தேன்.

வைரிகளான தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸூம், கூட்டணியாக ஒன்றிணைந்திருந்த வேளையில், யாழ்ப்பாணத்தில் இந்தக் கூட்டணிக்குப் பலமான அரசியல் போட்டியாக இருந்தவர் அல்பிரட் துரையப்பா. தமிழாராய்ச்சி மாநாட்டு வன்முறைகளைத் தொடர்ந்து, 'அல்பிரட் துரையப்பா துரோகி' என்ற பிரசாரம், கூட்டணிக்காரர்களால்த்தான் முன்னெடுக்கப்பட்டது. அதன் உண்மைத் தன்மை பற்றிய எந்தக் கேள்வியுமின்றி, அதுவே உண்மையென நம்பவைக்கப்பட்டது. இன்று மீண்டும் மீண்டும் அதுவே சொல்லப்பட்டு, அதுவே உண்மையெனக் கருதப்படும் நிலையில் நாம் நிற்கிறோம்.

வெகுஜனங்கள் ஒரு கணம், தமது உணர்வுவயப்பட்ட நிலையைத்தாண்டி பகுத்தறிவுக்கு இடம் கொடுத்து, ஏன், எதற்கு என்ற கேள்விகளையாவது கேட்டால், இந்தப் பிரசாரங்களின் போலி முகமூடி கழன்றுவிடும். ஆனால், பொய்களை உண்மையாக்கிய பிரசாரங்கள், பெரியளவில் நீண்டகாலத்தில் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக, அந்தப் பொய்களே உண்மைகளாக நம்பப்பட்டன; அந்தப் பொய்களே வரலாறுமாயின. அதன் விளைவாக, அந்தப் பொய்களே, இன்று பலரின் அடையாளங்களாகவும் ஆகிவிட்டன.

ஆனால், பொய்களை உண்மையாக்கும் இந்த உற்பத்தித் தொழிற்சாலைகள், இன்று சமூக ஊடகங்களின் உதவியால், இன்னும் வினைத்திறனுடன் தமது உற்பத்திகளை முன்னெடுக்கின்றன. "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்கிறான் வள்ளுவன். அறிவுள்ள சமுதாயமென்றால், பிரசாரங்களுக்கு எடுபடாமல், மெய்ப்பொருள் காண்பதற்கு முயலவேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

அடக்கமாக இருப்பவர்கள் தங்களை மெருகேற்றிக் கொள்கின்றார்கள். எந்த விடயத்திலும் தன்னிலை இழக்காதிருத்தல், சினந்து எழுதல், எவரையும் வையாது இருத்தல் எனப் பல்வேறு நல்லியல்புகள் இவர்களிடம் குடிகொண்டிருக்கும்.

எனினும், சிலரின் அடக்கம் நடிப்பாகும். அதை அவருடன் பழகியவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். தன்னடக்கம் உள்ளவர்கள், எவருடனும் அன்பாகப் பழகும் தன்மை கொண்டவர்கள்.

தங்களின் சுயவிருப்பத்தை, தேவைகளை அடைந்துகொள்ள, பிறரை அணுகும்போது மிகவும் பௌவியமாக நடப்பார்கள். காரியம் முடிந்த பின்னர், எவரிடம் உதவிகளைப் பெற்றார்களோ, அவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்" எனக் கேட்பவர்களும் உண்டு.

வாழ்க்கையில் கஷ்டப்படும்போது, அதை வெளிக்காட்டாமலும் பெரிதுபடுத்தாமலும் தொடர்ந்தும் துணிவுடன் இயங்குபவர் துன்பங்களை உடைத்தவர் ஆகிறார். அவரே முதற்தர மனிதன் ஆவார்.

வசதிகள் அற்றவர்கள் எல்லோரும் சந்தோஷம் அற்றவர்கள் அல்ல; இந்த வாழ்வே மேலானது என எண்ணுபவர்களின் சித்தம் சுத்தமானது. மன அடக்கம் நிம்மதியான வாழ்வை ஈட்டித்தரும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

## பாலைப்பாணி கிராமத்தின் கதி

முல்லைத்தீவு, பாலைப்பாணி கிராமத்துக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமை, போக்குவரத்து வசதியின்மை, தொழில் வாய்ப்பின்மை என்பவற்றால், இப்பிரதேசத்தில் வாழும் 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், மிகவும் பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படும் பாலைப்பாணி கிராமத்தில், நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில், யுத்தம் காரணமாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து தமிழகத்துக்குச் சென்றனர்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வை அடுத்து, மேற்படி கிராமத்தில் 65 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி, ஒன்பது ஆண்டுகளாகிய நிலையிலும் இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதியாகக் காணப்படும் வன்னிவிளாங்குளம் - மூன்றுமுறிப்பு வீதி, இதுவரை புனரமைக்கப்படாததால் மழைக்காலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதைவிட, குறித்த கிராமத்தில் தினமும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுகிறது. வன்னிவிளாங்குளம், மாங்குளம் உள்ளிட்ட பாடசாலைகளுக்கு, தினமும் ஒன்பது கிலோ மீற்றர் தூரம், காட்டுப் பாதை வழியாகப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள், யானைகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிராமத்தில் வாழும் அனைத்துக் குடும்பங்களும் வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றன என்றும் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, தொழில் வாய்ப்புகளும் இன்றி, வாழ்ந்து வருவதாகவும் பாலைப்பாணி கிராம மக்கள் தெரிவிக்கிறார்கள்.

-யது பாஸ்கரன்

# போதியளவு நிதி இல்லை

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் இதுவரை எதிர்கொண்டிராத மாபெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதுடன், அரச ஊழியர்களின் சம்பளங்களை செலுத்திய பின்னர், அரசாங்கத்திடம் மிகவும் சொற்ப அளவு வரிப் பணம் மாத்திரமே எஞ்சியிருப்பதாக வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.



“2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருமானம் 1,373 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது. அரச ஊழியர்களின் சம்பளத்தை செலுத்த அதில் 794 பில்லியன் ரூபாய் பயன்படுத்தப்பட்டது. ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு 258 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது” என அவர் கூறியிருந்தார்.

சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றைச் செலுத்துவதற்கு 1,052 பில்லியன் ரூபாய் மாத்திரமே செலுத்தப்பட்டது. அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூ. 1,373 பில்லியனாகும். இந்த வரிப்பணத்திலிருந்தே அரச ஊழியர்களின் சம்பளம் செலுத்தப்படுகின்றது. கடன்கள் மீதான வட்டியை செலுத்துவதற்கு 980 பில்லியன் ரூபாய்களும், மானியங்கள் மற்றும் மாற்றங்களுக்கான 717 பில்லியன் ரூபாய்களும் செலவிடப்படுகின்றன என அவர் மேலும் கூறினார்.

திரட்டப்படும் 1,373 பில்லியன் ரூபாயிலிருந்து 1,052 பில்லியன் ரூபாய் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு வழங்கப்பட்டதன் பின்னர், 321 பில்லியன் ரூபாய் மாத்திரமே எஞ்சியுள்ளது என அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில் நாட்டின் பொருளாதாரம் கடந்த 74 வருடங்களில் எதிர்கொண்டிராத மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## செலான் வங்கி – Mintpay உடன் இணைவு

வாடிக்கையாளர்களுக்கு தற்போது பொருட்களை அல்லது சேவைகளை கொள்வனவு செய்து, பின்னர் கட்டணம் செலுத்தும் புதிய கட்டமைப்பொன்றை செலான் வங்கி, Mintpay உடன் இணைந்து அறிமுகம் செய்துள்ளது. Mintpay இன் AI கட்டமைப்பில் இயங்கும் விற்பனை நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு இந்த வசதியை பெற்றுக் கொள்ளலாம். நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களினூடாக, சந்தையில் தற்போது தவணை முறையிலான கொடுப்பனவு திட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், வாடிக்கையாளர் விற்பனை நிலையத்துக்கு சென்று தமது கொடுக்கல் வாங்கலை தவணை முறையில் செலுத்துவதற்கு மாற்றி, கோர வேண்டியுள்ளது. ஆனால் Mintpay மூலம் வங்கியிலும் விற்பனை நிலையத்திலும் இந்தச் செயன்முறையை சுயமாக நிர்வகிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

இலங்கையில் ஒன்லைன் சொப்பிங் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு பெருமளவு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. Algoredge (PVT) LTD இனால் வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பத்தினூடாக, நாடு முழுவதையும் சேர்ந்த விற்பனையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பிரத்தியேகமான சொப்பிங் அனுபவத்தை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக உள்ளது. வாடிக்கையாளர்களுக்கு Mintpay கொடுப்பனவு கட்டமைப்பைப் பயன்படுத்தி, தமது சொப்பிங் செலவை மூன்று வட்டியில்லாத தவணை முறைக் கொடுப்பனவுத் திட்டமாக மாற்றிக் கொண்டு, இரண்டு மாத காலப்பகுதிக்குள் செலுத்த முடியும். இந்தத் தீர்வினூடாக வாடிக்கையாளர்களுக்கு Mintpay இல் தம்மைப் பதிவு செய்துள்ள எந்தவோர் ஒன்லைன் விற்பனைப் பகுதியையும் பார்வையிட்டு, அவர்களின் தகவல்களைப் பதிவு செய்வதனூடாக, சுயமாக அவர்களின் கொடுப்பனவுகள் தவணை முறைக் கொடுப்பனவுத் திட்டமாக மாற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

Mintpay க்கு பதிவு செய்து கொள்ளும் முறை இலகுவானது; சிக்கல்கள் அற்றது. வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் முற்பண சேவையாகக் கருத முடியும் என்பதுடன், விற்பனையாளருக்கு தமது பொருள் விற்பனை செய்யப்படும் போதே அதற்கான முழுப் பெறுமதியையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இது போன்ற உள்ளம்சங்களினூடாக கொடுப்பனவு அறவீடுகள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என்பதுடன், ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று மாதங்கள் வரை காத்திருக்க வேண்டிய தேவையையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

2020 செப்டெம்பர் மாதத்தில் பரீட்சார்த்த அறிமுகம் மேற்கொள்ளப்பட்டதுடன், Mintpay அணியினால், தமது சேவையை உறுதி செய்து, மேலும் விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.







## இலங்கையில் முதன் முறையாக paper straw அறிமுகம்

நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பான, மைலோ, அதன் Ready-to-Drink (RTD) தயாரிப்பில் paper straw களை அறிமுகப்படுத்தி உள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கையில் நுகர்வோர் சூழலின் பேண்தகமையைப் பேணுகின்ற வகையில் RTD பான வகை ஒன்றால் முதன்முதலாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு முயற்சியாகும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த முயற்சியின் மூலமாக நிறுவனம் ஆண்டொன்றுக்கு 90 மில்லியன் plastic straw களை அகற்ற இடமளிப்பதுடன், மேலும் அனைத்து புதிய மைலோ பொதியிடல் செயற்பாடுகளும் 100% மீள்சுழற்சி செய்யக்கூடியதாக மாறும்.

மேலும், பால் அட்டைப்பெட்டிகளை மீள்சுழற்சி செய்வதற்கான தொழிற்சாலையொன்றும் அமைக்கப்பட்டு உள்ளதுடன், இது Tetra Pak, நெஸ்லே போன்ற உணவு, பான வகை நிறுவனங்களின் துணையுடன் இயங்கும். இந்தத் தொழிற்சாலை மைலோ RTD ஐ மீள்சுழற்சி செய்யும். இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த பான அட்டைப்பெட்டி தொழிற்றுறைக்கும் பயனளிக்கும். மைலோ RTD பானம் அருந்தி முடிக்கப்பட்ட பின்னர், அவற்றை பொறுப்புணர்வுமிக்க முறையில் அப்புறப்படுத்தல், மீள்சுழற்சிக்காக சேகரித்தல் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக கல்வியமைச்சு, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை, மாநகர சபைகளுடன் இணைந்து நெஸ்லே நிறுவனம் தற்போது முன்னெடுத்து வருகின்ற பாடசாலைகள் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் அனுகூலத்தை இதற்காக உபயோகிக்கும்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு SLT–MOBITEL நிவாரணம்

SLT-MOBITEL, இலங்கைக்கு உதவும் தனது முயற்சிகளின் மற்றுமோர் அங்கமாக, இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களின் உதவியுடன், வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட கொழும்பு, கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள், குடிநீர் போத்தல்களைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்வந்துள்ளது.

அதன் பிரகாரம், கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவ பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சுதுநெலும்புர தொடர்மனைத் தொகுதியில் வசிக்கும் மக்களுக்கும், கம்பஹா மாவட்ட பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பல பிரதேச மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள், குடிநீர் போத்தல்கள் அடங்கிய பொதிகளை SLT-MOBITEL விநியோகித்திருந்தது.



புதுடெல்லி

# ‘தமிழ் மீதான அன்பு குறையாது’

நான் உலகின் பழைமையான தமிழ்மொழி, தமிழ் கலாசாரத்தின் பெரிய அபிமானி. தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது என பிரதமர் மோடி கூறியுள்ளார்.



மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் நமது வீரர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். திறமை, அர்ப்பணிப்பு மனதில் உறுதி, நேர்மை எல்லாம் சேரும் போது சாம்பியன் உருவாகிறார். ஒலிம்பிக் போட்டிகள் குறித்து பேசும் போது, மில்கா சிங்கை நம்மால் மறக்க முடியாது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, அவருடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் அளிக்க வேண்டும் என கேட்டு கொண்டேன்.

அப்போது பிரதமர் கூறுகையில், பஞ்சாப் சீக்கிய குரு கோவிந்த்ஜி தமிழ் குறித்து பெருமையாக எடுத்துரைத்துள்ளார். திருக்குறளும் புகழ்பெற்றது. உலகிலேயே தமிழ்மொழி சிறந்த மொழி. தமிழ் மொழி எனக்கு மிக பிடிக்கும். இந்த மொழியின் ரசிகன் நான். நான் உலகின் பழமையான தமிழ்மொழி மற்றும் தமிழ் கலாசாரத்தின் பெரிய அபிமானி. தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது. இவ்வாறு அவர் பேசினார்.



லக்னோ

### பகுஜன் சமாஜ் கட்சி

## தனித்து போட்டியிடும்

அடுத்தாண்டு நடக்கும் உத்தர பிரதேசம்; உத்தர்காண்ட் சட்டசபை தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி தனித்து போட்டியிடும் என அக்கட்சி தலைவர் மாயாவதி கூறி உள்ளார்.

உ.பி., உத்தர்காண்ட் மாநிலங்களுக்கு அடுத்தாண்டு சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக அரசியல் கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. பஞ்சாப் மாநிலத்தில், அங்கு முக்கிய எதிர்க்கட்சியான சிரோன்மணி அகாலிதளம் கட்சியுடன், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி அமைத்து உள்ளது. இதனையடுத்து, உ.பி., உத்தரகாண்ட் சட்டசபை தேர்தலில், ஒவைஸியின் ஏஐஎம்ஐஎம் கட்சியுடன் மாயாவதி கூட்டணி அமைப்பார் எனத் தகவல்கள் வெளியாகியது.

புதுடெல்லி

### 8ஆவது மாதத்தில்

## தொடரும் விவசாயிகளின் போராட்டம்

புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டம் 7 மாதங்கள் முடிந்து 8ஆவது மாதத்தில் அடியெடுத்து வைத்தது.

இந்நிலையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், ‘போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என அனைத்து விவசாய சங்கங்களிடமும் கேட்டுக் கொள்கிறேன். வேளாண் சட்டங்களின் எந்தவொரு விதி தொடர்பாகவும் விவாதிக்கவும் அதற்கு தீர்வு காணவும் அரசாங்கம் தயாராக உள்ளது’ எனவும் பதிவிட்டிருந்தார்.

இதனிடையே போராட்டம் அமைதி வழியில் தொடரும் என்று விவசாயிகள் அறிவித்துள்ளனர். வேளாண் சட்டங்களைத் திரும்ப பெறக் கோரி, நாடு முழுவதிலும் இருந்து குடியரசுத் தலைவருக்கு மனு அனுப்பவுள்ளதாக சம்யுக்த கிஸான் மோர்ச்சா அறிவித்துள்ளது.



சிக்கமகளூர்

### சிறுவனுடன் முகநூலில் தொடர்பு

## திருமணம் முடிந்த பின் பெண் கைது

சிக்கமகளூர் மாவட்டம் கடூர் தாலுகா பிரம்மசமுத்திரா கிராமத்தைச் சேர்ந்தவர் 17 வயது சிறுவன் ன திறன்பேசியை ஒன்றை பயன்படுத்தி வருகிறான். இந்த நிலையில் முகநூல் மூலம் அந்தச் சிறுவனுக்கு, பெங்களூவைச் சேர்ந்த (வயது 20) இளம்பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. முதலில் நண்பர்களாகப் பழகி வந்த இவர்கள் பழக்கம் பின்னர், காதலாக மலர்ந்தது.

இதன்போது, முதலில் இளம்பெண், தன்னுடைய காதலை அந்தச் சிறுவனிடம் தெரிவித்துள்ளார். அப்போது ‘தனக்கு 17 வயது தான் ஆகிறது’ என்று கூறி, காதலை ஏற்க மறுத்துள்ளான். ஆனால்,தொடர்ந்து தனது காதலை வெளிப்படுத்தி வந்துள்ளார். இதனால் அந்தச் சிறுவன் காதலை ஏற்றுக் கொண்டான்.


இதையடுத்து இருவரும் பெங்களூருவிலும், பிரம்ம சமுத்திரா கிராமத்திலும் அடிக்கடி சந்தித்து பேசினர். ஒரு கட்டத்தில் இவர்களது காதல் விவகாரம் இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. பின்னர், இரு வீட்டாரும் பேசி காதலுக்குப் பச்சைக்கொடி காட்டினர்.

இருவருக்கும் கோவிலில் எளிமையாக திருமணம் நடந்தது. திருமணத்துக்கு பிறகு இவர்கள், தனிக்குடித்தனம் நடத்தி வந்தனர். சிறுவனை, இளம்பெண் திருமணம் செய்திருப்பதாகக் கூறி, குழந்தைகள் மற்றும் பெண்கள் நலத்துறை அதிகாரிகளுக்கு, கிராமத்தார் அறிவித்துள்ளனர். அப்போது 17 வயது சிறுவனை காதல் திருமணம் செய்திருந்தது தெரியவந்தது. இதையடுத்துபொலிஸார் பெண்ணைக் கைது செய்தனர்.

புதுடெல்லி

### ‘ஜெய் ஹிந்த்’ நீக்கப்பட்டதால்

## ‘சினம் கொண்டார் அமித் ஷா’



தமிழக சட்டசபையில் ஆளுநர் ஆற்றிய உரையில், ‘ஜெய் ஹிந்த்’ என்ற வார்த்தை நீக்கப்பட்டது தொடர்பாக, உளவு அமைப்புகள் அனுப்பிய மூன்று பக்க இரகசிய அறிக்கையால், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கடும் கோபத்தில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான புதிய அரசு பதவியேற்ற பின்னர், சட்டசபையின் முதல் கூட்டம், ஆளுநர் உரையுடன் சமீபத்தில் ஆரம்பமாகியது. ஆளுநர் உரையின் இறுதியில் வழக்கமாக, ‘ஜெய் ஹிந்த்’ எனப்படும் (நாடு வெல்லட்டும்) என்ற வார்த்தை இடம்பெறும். ஆனால், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் ஆற்றிய உரையில், அந்த வார்த்தை நீக்கப்பட்டிருந்தது; சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக, சென்னையில் உள்ள மத்திய உளவு அமைப்புகள், மூன்று பக்கங்கள் அடங்கிய இரகசிய அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு அனுப்பியுள்ளன. ‘ஆளுநர் உரையில் முதலில் ‘ஜெய் ஹிந்த்’ வார்த்தை இடம்பெற்றிருந்தது. ஆனால், தமிழக நிதியமைச்சர் தியாகராஜன் அதை நீக்கி, முதலமைச்சர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார்’ என, அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை

### உதயநிதியின் வெற்றியை எதிர்த்து

## உயர் நீதிமன்றத்தில் வழக்கு

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி திராவிட முன்னேற்ற கழக எம்எல்ஏ உதயநிதி ஸ்டாலின் வெற்றியை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.



தமிழகத்தின் 16ஆவது சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி நடைபெற்றது. இதில் தி.மு.க சார்பில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் தி.மு.க இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் போட்டியிட்டார். அவரது வெற்றியை எதிர்த்து, அத்தொகுதியின் தேசிய மக்கள் கட்சி வேட்பாளரான வழக்கறிஞர் எம்.எல்.ரவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

அவரது மனுவில், ‘உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்த வேட்பு மனுவில், தன் மீதான குற்ற வழக்குகள் குறித்து தவறான தகவல்களைத் தெரிவித்துள்ளார். அவரது வேட்பு மனுவை ஏற்றுக்கொண்டதைச் செல்லாது என அறிவிக்க வேண்டும். தொகுதியில் தேர்தல் நியாயமாக நடைபெறவில்லை என அறிவிக்க வேண்டும்’ என மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரித்தானியா

உதவியாளரைக் கொஞ்சி, கொரோனா விதிகளை மீறியமை:

# மீறிய பிரித்தானிய சுகாதார அமைச்சர்

பிரித்தானிய சுகாதார அமைச்சர் மற் ஹன்கொக் நேற்று முன்தினம் பதவி விலகியுள்ளார்.

தனது அலுவலகத்தில் உதவியாளர் ஒருவரைக் கொஞ்சி, கட்டியணைத்து கொரோனா விதிகளை மீறியதாக கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து ஹன்கொக் பதவி விலகியுள்ளார்.

இந்நிலையில், முன்னாள் நிதியமைச்சர் சாஜிட் ஜாவிட்டால் ஹன்கொக் பிரதியிடப்படவுள்ளார்.

பிரித்தானியாவின் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகரான டொமினிக் கம்மிங்ஸுடனான அதிகாரப் போட்டியில், கடந்தாண்டு ஆரம்பத்தில் திறைசேரியிலிருந்து ஜாவிட் விலகியிருந்தார்.





ஜேர்மனி

கத்திக்குத்து தாக்குதலில்

# மூவர் கொல்லப்பட்டனர்

ஜேர்மனிய நகரமான வுர்ஸ்பேர்க்கில், கத்திக் குத்து தாக்குதலில், வெள்ளிக்கிழமை (25) கொல்லப்பட்ட மூவரும் பெண்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சோமாலிய குடியேற்றவாசி ஒருவரான 24 வயதான சந்தேகநபர், திணைக்களக் களஞ்சியம் ஒன்றின் சமையலறைப் பகுதி ஒன்றிலிருந்து கத்தியை எடுத்து, அதற்குள் இருந்த சிலரைத் தாக்கியுள்ளதுடன், பின்னர் வெளியே இருந்தவர்களைத் தாக்கியுள்ளார்.

இத்தாக்குதலில் ஐந்து பெண்களும், குழந்தையொன்றும் காயமடைந்திருந்தனர்.

மனரீதியாக நிலையாக இல்லாத, தீவிரவாத இஸ்லாமிய நம்பிக்கைகளை சந்தேகநபர் கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஐ. அமெரிக்கா

புளோரிடா கட்டடம்:

# 156 பேர் மாயம்

## உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக உயர்வு

ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாவில் கட்டடம் தகர்ந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்று முன்தினம் ஐந்தாக உயர்ந்துள்ளது.

காணாமல்போன 156 பேரை மீட்புப் பணியாளர்கள் தேடி வருகின்ற நிலையிலேயே உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது உயர்ந்துள்ளது.

இந்நிலையில், நீச்சல் தடாகத் தளத்தின் கீழ் பாரிய கட்டமைப்பு சேதம், நிலக்கீழ் வாகனத் தரிப்பிடத்தில் கொங்கிறீட் மோசமடைகின்றமைக்கான ஆதாரத்தை பொறியியலாளர் ஒருவர் கண்டுபிடித்ததை புதிதாக வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டு அறிக்கை ஒன்று வெளிப்படுத்தியிருந்தது.





கனடா

பழங்குடியின சமூகத்தின்

# மேலும் இரண்டு தேவாலயங்கள் எரிப்பு

மேற்கு கனடாவிலுள்ள பழங்குடியினச் சமூகங்களில் மேலுமிரண்டு கத்தோலிக்கத் தேவாலயங்கள் நேற்று முன்தினம் காலையில் எரிக்கப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு தேவாலயங்களிலும் ஒரு மணித்தியாலத்துக்குள்ளேயே தீ ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இரண்டு கட்டடங்களும் முழுமையாக அழிவடைந்துள்ளதாகவும், எரிப்புச் சம்பவத்தை சந்தேகத்துக்கிடமானதாகக் கருதுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ. அமெரிக்கா

# விமானத்திலிருந்து குதித்த நபர்

ஐக்கிய அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலஸ் சர்வதேச விமான நிலையத்தில், ஓடும் விமானம் ஒன்றிலிருந்து நபர் ஒருவர் குதித்துள்ளார்.

விமானத்தின் விமானிகள் அறைக்குச் செல்ல முயன்றதையடுத்தே குறித்த நபர் குதித்துள்ளார்.

விமானத்தின் கதவைத் திறந்து, அவசர வழுக்கின் மூலம் குறித்த நபர் வெளியேறியதாக விமான நிர்வாக அதிகார சபை தெரிவித்துள்ளது.





# முந்திக்கொள்கின்றனர்

பங்களாதேஷில் நாடளாவிய ரீதியான கடுமையான முடக்கத்துக்கு முதல், வெளியேறுவதற்காக அந்நாட்டுத் தலைநகர் டாக்காவின் படகுத் துறைகளை மக்கள் நிரப்பியுள்ளனர்.

இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டித் தொடரில்

# இங்கிலாந்தால் வெள்ளையடிக்கப்பட்ட இலங்கை

இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் இங்கிலாந்தால் இலங்கை வெள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செளதாம்டனில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்தே 3-0 என இலங்கை வெள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் குசல் பெரேரா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய அவிஷ்க பெர்ணான்டோ, அகில தனஞ்சயவை, ஒஷாத பெர்ணான்டோ, லக்‌ஷன் சந்தகான் ஆகியோர் பிரதியிட்டிருந்தனர்.

இங்கிலாந்து சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய ஜேஸன் றோய், மார்க் வூட்டை மொயின் அலி, கிறிஸ் வோக்ஸ் பிரதியிட்டிருந்தனர்.

இந்நிலையில், டேவிட் மலனின் 76 (48), ஜொனி பெயார்ஸ்டோவின் 51 (43) ஓட்டங்கள் மூலம் சிறந்த அடித்தளத்தைப் பெற்ற இங்கிலாந்து, துஷ்மந்த சமீரவிடம் நான்கு விக்கெட்டுகளை இறுதியில் பறிகொடுத்து, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களையே பெற்றது. சமீர தனது நான்கு ஓவர்களில் 17 ஓட்டங்களையே வழங்கியிருந்தார், பினுர பெர்ணான்டோ, தனது நான்கு ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார். சந்தகான், நான்கு ஓவர்களில் 28 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்திருந்தார்.

பதிலுக்கு, 181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, டேவிட் வில்லி, வோக்ஸ், சாம் கர்ரன், கிறிஸ் ஜோர்டான், லியான் லிவிங்ஸ்டோன், மொயினிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 91 ஓட்டங்களையே பெற்று 89 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது.

பந்துவீச்சில், வில்லி 4-0-27-3, வோக்ஸ் 4-0-9-1, ஜோர்டான் 4-1-13-1, கர்ரன் 4-0-14-2, லிவிங்ஸ்டோன் 1-0-8-1, மொயின் 0.5-0-3-1 என்றவாறு பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மலனும், தொடரின் நாயகனாக கர்ரனும் தெரிவாகினர்.






எல்.பி.எல்:

# இரத்தாகிய கொழும்பு, தம்புள்ளையின் உரிமங்கள்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) கொழும்பு கிங்ஸ், தம்புள்ளை வைக்கிங்ஸின் உரிமங்களை இரத்துச் செய்வதை இலங்கை கிரிக்கெட் சபை அங்கிகரித்துள்ளது.

கட்டணங்கள், ஏனைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக இரண்டு அணிகளையும் நீக்குமாறு எல்.பி.எல் உரிமத்தைக் கொண்டுள்ள ஐ.பி.ஜி பரிந்துரைத்ததையடுத்தே குறித்த அங்கிகாரம் கிடைத்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயை அடிப்படையாகக் கொண்ட முர்ஃபாட் முஸ்தபாவின் சாஸா குழுவால் கொழும்பும், இந்தியாவின் சச்சின் ஜோஷியின் தெலுங்கு வொரியர்ஸ் நிறுவனத்தால் தம்புள்ள வைக்கிங்கும் உரிமைப்படுத்தப்பட்டிருந்தது. முஸ்தபா கேரளாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், புதிய இரண்டு உரிமையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச கிரிக்கெட் சபையின் தேவையான அனுமதி கிடைத்தவுடன் உரிமையாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது. புதிய உரிமையாளர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனப்படுகிறது.

கடந்த பருவகாலத்தில் குறித்த இரண்டு அணிகளுமே லீக் போட்டிகள் முடிவில் முதலிரண்டு இடங்களைப் பெற்றிருந்தன.

# பங்களாதேஷின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக ஹேரத்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சு ஆலோசகராக அவ்வணியுடன் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடர் வரையில், இலங்கையணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் இணைந்துள்ளார்.

இதேவேளை, பங்களாதேஷின் சிம்பாப்வேக்கான சுற்றுப்பயணத்தின்போது அவ்வணியின் துடுப்பாட்ட ஆலோசகராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் அணித்தலைவர் அஷ்வெல் பிறின்ஸ் கடமையாற்றவுள்ளார்.

இந்நிலையில், நீண்ட காலப் பொறுப்புகளுக்கு கருத்திற் கொள்ளப்படுவதற்கு முன்னர் ஹேரத், பிறின்ஸின் பெறுபேறுகள் கருத்திற் கொள்ளப்படும் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் நடவடிக்கைகளுக்கான தலைவர் அக்ரம் கான் தெரிவித்துள்ளார்.




யூரோ கிண்ணத் தொடர்:

# காலிறுதியில் இத்தாலி, டென்மார்க்

யூரோ கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிகளுக்கு, இத்தாலி, டென்மார்க் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

பிரித்தானியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஒஸ்திரியாவுடனான மேலதிக நேரம் வரை சென்ற இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு இத்தாலி தகுதி பெற்றுள்ளது.

இத்தாலி சார்பாக, பெடெரிக்கோ சியெஸா, மத்தியோ பெஸினா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஒஸ்திரியா சார்பாகப் பெறப்பட்ட கோலை சாஸா கலாஸிச் பெற்றிருந்தார்.

இதேவேளை, நெதர்லாந்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற வேல்ஸுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு டென்மார்க் தகுதி பெற்றிருந்தது.

டென்மார்க் சார்பாக, கஸ்பர் டொல்பேர்க் இரண்டு கோல்களையும், ஜோகிம் மயெஹ்லே, மார்டின் பிறத்வெய்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிரெனடாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவவுகளின் அணித்தலைவர் கெரான் பொலார்ட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்றது. 161 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், 15 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இப்போட்டியின் நாயகனாக எவின் லூயிஸ் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 28 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.